1972 பிப்ரவரி 1]

Traffic dislocation in Nandanam area

* 259 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that traffic was dislocated in the Nandanam area in Madras City about 1st September 1971 due to clash between the students and the bus crew; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருவாரூர் கோவில் தேர்

* 260 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓடாமல் இருந்த திருவாரூர் தேரினை ஓட விடுவதற்காக அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஒன்றும் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : விலையுயர்ந்த கோயில் தேர்களுக்கெல்லாம் சிலபேர் தீ வைப்பதிலே மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே தேர்களையெல்லாம் பாதுகாப்பதற்கு அறநிலைய பாதுகாப்பு இலாகா ஏதாவது நடவடிக்கை எடுக்க விரும்புமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தீ வைப்பதனால் யாருக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது என்பதுபற்றி நமக்குத் தெரியாது. ஆனால் தீவிபத்துக்களை தடுக்கின்ற வகையிலேயும், அவைகளைப் பாதுகாக்கின்ற வகையிலேயும் தக்க நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. ஒத்திவைப்புத் தீர்மானம்

திருமங்கலம் நாடார் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் தாக்கப்பட்டதும். பள்ளி மூடப்பட்டதும் குறித்து

MR. SPEAKER: The hon. Member, Thiru K. T. K. Thangamani, has given notice under rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules for adjourning the business of the House to discuss the following matter of urgent public importance :—

'Serious situation in Thirumangalam in Madurai district consequent upon closure from 24th January 1972 of Nadars' High School affecting more than 1,000 students following manhandling of a Teacher by the staff at the instance of Management, and students' protest demonstration.'